# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.103/2022</u>

RW–1ரவிச்சந்திரன் நாள்.27.11.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

விபத்தில் சம்மந்தப்பட்ட பொலிரோ வாகனம் என்னுடையது என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு விபத்து தேதியில் காப்பீடு இல்லையென்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்திற்கு என்னுடைய வாகன ஓட்டுநரும், டாடா ஏஸ் ஓட்டுநர் காரணம் என்ற முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால்சரிதான். என்னுடைய ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லையென்று காவல்துறை உயர்அதிகாரிகளுக்கு நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. என்னுடைய ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்பதால் தான் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 போட்டோவில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் புகைப்படம் மட்டும் தான் உள்ளது என்றும் பக்கத்தில் உள்ள இடம் குறித்து விவரம் இல்லைஎன்றால் சரிதான். விபத்து சமயத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் ஹெல்மட் அணிந்திருந்தார் என்றும், விபத்தின் போது அது கழன்று விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தின் அருகில் நான் கூறுவது போன்று திருமணம் விழாவில் டியூப்லைட் வெளிச்சம் கிடையாது என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய வாகன ஓட்டுநர் காணரம் என்பதாலும், விபத்து தேதியில் காப்பீடு செய்யாததாலும் மனுதாரர்களுக்கு நான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.